## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 5. ஜெயமல்லர்

---

ஜெயமல்லரின் வாழ்க்கையில் இறைவன் நிகழ்த்தும் லீலைகளை வீர சிவாஜியின் வாழ்க்கையிலும் துகாராமின் அருளால் நிகழ்வதைப் பின்னர் பார்க்கலாம்.அதே போல் திருவிளையாடல் புராணத்தில் பல முறைப் பாண்டியர்களுக்கு இதில் வருவது போன்ற லீலைகள் நிகழ்வதையும் காண முடியும்.

**இவற்றில் இருந்து என்ன தெரிகிறது?**

இறைவனான ப்ரஹ்மம் ஒன்றே!
அது பூரணமானது.யார் ஒருவர் தானும் ப்ரஹ்மமும் ஒன்றே என்ற உண்மையை அறிந்தும் தெரிந்தும் உணர்ந்தும் அதனொடு ஐக்யம் ஆகிவிடுகிறாரோ அவர்களுக்குக் குறை என்பதே இல்லை.அவர்கள் முயற்சி செய்து நிகழ்வது என்பது ஏதும் இல்லை.அவர்கள் சதா தூய அன்பால், சேவையால் தெய்வீக நிலைக்குச் செல்கிறார்கள், முக்திக்குப் பாதை வகுக்கிறார்கள்.

**சமாதி என்றால் என்ன?**
பாரத தேசத்தில் பல ஆன்மீகப் பெரியோரின் பூத உடல் பூமிக்குள் அடக்கம் ஆன ஸ்தலங்களை சமாதியாக வழிபடுகிறோம்.***இவ்வழக்கம் அனைத்து மதங்களுக்கும் பொதுவே***.சமாதி என்றால் பூத உடல் அடக்கம் செய்யப்பட்ட இடமா?இல்லை!

தானும் தனக்குக் காரணமான ப்ரஹ்மமும் ஒன்றே என்று தெளிந்த அன்பர்கள் அந்நிலையில் தன்னைத் தூய அன்பே மயமாக்கிக் கொண்டு அன்பர்களுக்கு சேவை செய்து உடலை விடுக்கின்றனர்.அவர்கள் உடலும் ஆன்மாவும் ப்ரஹ்ம தத்வமாகி அருளும் சக்தி கொண்டு இருக்கும் இடம் சமாதி.

த்யானம் மூலம், பாவ பக்தி மூலம் தன்னை ப்ரஹ்ம தத்துவத்துடன் இணைத்துக் கொண்டு ஆனந்த சுகத்தில் லயிப்பதும் சமாதி ஆதலே.ஸ்ரீராமக்ருஷ்ணர், ஸ்ரீமத் பாம்பன் ஸ்வாமிகள் , வள்ளலார் போன்றோர் சமாதி நிலையில் அடிக்கடி லயித்து மீள்வதைக் காணலாம்.

ஜெயமல்லர் அனுபவிக்கும் சமாதி
வட தேசத்தில் ஒரு பழைய நகரம் மேடம்.
அதன் சிறிய அரசன் தான் ஜெயமல். [தமிழில் மரியாதை விகுதியுடன் ஜெயமல்லர் என்கிறோம்]

மல் யுத்தத்தில் எப்போதும் ஜெயிப்பவன் என்று அர்த்தம்.சதா மனதுக்கும் ஞானத்துக்கும் ஆன்மீக வாழ்க்கையில் லயிப்பது பற்றிய மல்யுத்தம் நிகழ்கிறது அல்லவா?ஜெய்மல் பூர்வ ஜென்ம புண்ணியத்தால் பாவ பக்தியிலும் த்யானத்திலும் கைதேர்ந்து சமாதி நிலையை அனுபவிக்கும் பேறு பெறுகிறார்.

அதன் மூலம் தானும் உலகும் ப்ரஹ்மமும் வேறல்ல என்ற ஏக பாவம் அவருள் உலாவியதால் அவர் ஏதும் வேண்டாதவராய் வாழ்கிறார்.அரசனாய்த் தன் கடமையை மட்டும் செய்தார்.தானே எல்லாம் என்ற உண்மையை உணர்ந்த பின் பேதம் போகிறது.அப்போது நமக்கு வேண்டியது - வேண்டாதது என்று எது உள்ளது?

**பதவியும் பொறுப்பும் போகத்துக்கு அல்ல!**

அவருடைய சகோதரனுக்கு நாட்டை ஆளும் பேராசை ஏற்பட்டது.தம்பியின் பேராசையை உணர்ந்த அவரும் அவனது சில தீய எண்ணங்கள் மாறட்டும், அதன் பின் தேசத்தை ஆளும் பொறுப்பை ஒப்படைப்போம், அப்போதே மக்கள் நலம் காக்கப்படும் என்று அமைதி காத்தார்.அதை எடுத்துக் கூறி விளக்கினார்.அவன் மாறுவதற்கு வழி சொன்னார்.தேசத்தின் ஆட்சி என்பது பதவி மோஹமும் போகமும் பெற அல்ல என்று கூறியும் பலனில்லை.

அன்று அதிகாலை எப்போதும் போல பாண்டுரங்கனிடத்தில் பாவபக்தியால் ஈடுபட்ட ஜெயமல் அமைதியாக சமாதி நிலைக்குச் சென்று ஏகாந்த ஆனந்தத்தில் லயித்து விடுகிறார்.அப்போது மேடம் நகரின் கோட்டையை அவரது தம்பி ஒரு படையுடன் முற்றுகை இட்ட செய்தி அமைச்சருக்கும் அரசிக்கும் தெரியவர, அவர்கள் தங்களிடம் இருந்த சொற்பப் படையுடன் முற்றுகையை எதிர்க்க வேண்டிய கட்டாயம்.ப்ரபஞ்சமும் தானும் வேறல்ல என்ற உண்மையில் வாழ்பவனுக்குப் போர் எப்படி வரும்? படை எதற்கு? வீரர்கள் எதற்கு? மேலும் ”தனது” என்ற தன்னலம் இல்லாத மனிதனுக்கு ஏதும் தேவையில்லை.

ஜெயலல்லின் வீரர்களால் அவரது தம்பியின் மிகப்பெரிய படையை எதிர்க்க முடியவில்லை.ஆனால் தொடர்ந்து போராட்டம் செய்தனர்.அப்போது படைக்குள் ஒரு புதிய வீரன் சேர்ந்து மிகவும் மதிநுட்பத்துடன் பல வழிமுறைகளைக் காட்டி, எதிரிகளைச் சிதறி ஓடிட வைத்தான்.அவனது மிக உயர்ந்த சமயோசித புத்தியும் விழிப்புணர்வும் எதிரிகளை விரட்டி விட்டது.அப்போது ஜெயமல்லும் அவ்வீரனை ஆலிங்கனம் செய்து பாராட்டினார்.தம்பியோ அவனைப் பார்த்து வியந்து போரைக் கைவிட்டு அண்ணனிடம் சரண் புகுந்தான்.

சற்று நேரத்தில் மீண்டும் ஜெயமல் வெளியே வர ஒரே குழப்பம்.அது வரை அங்கே இருந்த ஜெயமல் எங்கே? அவர் யார்? வீரன் யார்?

**விளங்கிய உண்மைகள் இரண்டு**

சமாதி நிலையில் தன்னை ப்ரஹ்மத்துடன் லயிக்கச் செய்த அவருள் இருந்த சக்தியே மற்றொரு ஜெயமல்லால் கோட்டையின் வெளியின் தோன்றியது, அரசனாய்த் தன் கடனைச் செய்தது.அதே சமயம் அவரது தெய்வபலம் வீரன் வடிவில் கோட்டையைக் காத்தது.இதை உணர்ந்த அவர் சமாதி நிலையில் தன்னுள் இருந்து இறைமை செய்த லீலையை எண்ணி எண்ணி வியந்தார்.திருந்திய தன் தம்பிக்கு அரசாட்சியைக் கொடுத்து அவர் தூய ஆன்மீக சேவைக்குள் சதா தன்னை ஈடுபடுத்தி சேவையில் லயித்து ஒரு காலத்தில் உடலை சமாதி ஆக்கினார்.

ஒரு போக வாழ்க்கையில் திளைக்கும் வாய்ப்பு கிடைத்தும் அதை வேண்டாம் என்று விடுத்து ஆன்மீக சாதனைகள் மூலம் தன்னுள் இருக்கும் இறைமையை உணர்ந்த ஒரு அரசன் இவர்.இவரைப் போல் செல்வ செழிப்பிலும் பதவியின் உயர்விலும் இருந்து இறைமையுடன் தன்னை லயிக்கச் செய்த அன்பர்கள் பலர் உண்டு.

ஹரி ஓம்!